2013 மே 2]

தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் அனுமதி பெற்று, மேம்பாலம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-பழங்காநத்தம்-டி.வி.எஸ். நகரை இணைக்கக்கூடிய இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி 50 கோடி ரூபாயில் நடைபெற்று வருகிறது. அதேபோல, திருப்பரங்குன்றத்தில் இரயில்வே மேம்பாலப் பணியும் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் தாமதமாக நடைபெறுகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, துரிதப்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு இடங்களில் பாலப் பணிகள் தாமதமாக நடைபெற்று வருவதாக இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அந்தப் பணிகளைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 373, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

373—

கால்வாய் அமைத்தல்

***6716—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பநத்தம் அணையிலிருந்து பாரமனந்தல் வழியாகக் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, குப்பநத்தம் அணையிலிருந்து பாரமனந்தல் வழியாகக் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். குப்பநத்தம் அணை செய்யாற்றின் குறுக்கே செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகில் கட்டப்பட்டுள்ளது. செய்யாற்றின்மூலம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளில், செங்கம் அணைக்கட்டு, கொட்டக்குளம் அணைக்கட்டு, முடியனூர் அணைக்கட்டு, ஆலத்தூர் அணைக்கட்டு, மேல்செய்யார் அணைக்கட்டு என 5 அணைக்கட்டுகள் உள்ளன. இந்த அணையிலிருந்து திறந்தவெளிக் கால்வாய்மூலம் பாசனப் பகுதிகள் பயனடையும் வகையிலே, அணையினுடைய கொள்ளளவு நிர்ணயிக்கப்பட்டு, கட்டப்பட்டுள்ளது. குப்பநத்தம் அணையின் நிர்ணயிக்கப்பட்ட பாசனப் பரப்பு 7,682 ஏக்கர் ஆகும். இந்த பாசனப் பகுதிகளுக்குத் தேவையான நீர் குப்பநத்தம் அணையிலிருந்து ஆற்று மதகுகள்மூலம் ஆற்றில் திறந்துவிடப்பட்டு, 5 அணைக்கட்டுகளிலிருந்து ஏற்கெனவே உள்ள கால்வாய்கள்மூலம் ஏரிகளுக்குச் செல்லும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குப்பநத்தம் அணையிலிருந்து புதிய கால்வாய் வெட்டி பாசனம் அளிக்க, அத்திட்டத்தில் உத்தேசிக்கப்படவில்லை. கூடுதலாகப் புதிய ஆயக்கட்டுகளைச் சேர்ப்பதால், ஏற்கெனவே பயனடையும் ஆயக்கட்டுகளுக்குப் பாதிப்பு ஏற்படும். செய்யாற்றின்மூலம் ஏற்கெனவே பயனடைந்து வரும் கடைமடைப் பகுதி ஆயக்கட்டுகளின் நீரியல் உரிமைகள் பாதிக்கப்படும். எனவே, குப்பநத்தம் அணையிலிருந்து பாரமனந்தல் வழியாக புதிய கால்வாய் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் ஒளிவிளக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு,*

2013 மே 2]

விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கைகள்மூலம் எந்த அளவிற்கு உதவி செய்தார் என்பது நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். விவசாயிகளுக்கும் சரி, இதர மக்களுக்கும் சரி, சலுகை வழங்குகின்ற உன்னதத் தலைவி டாக்டர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட மக்களின் காவல் தெய்வம், ஜாதி, மதம் பார்க்காமல் அனைத்துச் சமுதாயத்தினரும் மனிதர்களே என்றும், ஜாதி இல்லை என்றும் முந்தைய தினம்கூட பேருரையாற்றிய தமிழகத்தினுடைய விடிவெள்ளி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

எனது தொகுதியிலே, குப்பநத்தம் அணையிலிருந்து பாரமனந்தல் வழியாக கால்வாய் அமைத்து, நீர்வரத்து இருந்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை ஆய்வு செய்து, தமிழக முதல்வர் அவர்களிடம் கலந்தாலோசித்து பரிசீலிப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அணைக்குக் கீழே இருக்கின்ற மக்களின் உரிமைகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்திற்கு சாத்தியக்கூறு இல்லை என இங்கே எடுத்துக் கூறினேன். மீண்டும் ஒரு முறை இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து, விவசாயிகளின் உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் இருந்தால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதனால் எந்தவிதமான பாதிப்பும் இருக்காது என்பதைக் கூறி, இதை பரிசீலனை செய்கின்றேன் என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும்,

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியத்தில் ஓடுகின்ற கொட்டாற்றின் குறுக்கே மசிக்கம் கிராமம் அருகே ஒரு தடுப்பணை கட்டப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன். இந்தத் தடுப்பணையைக் கட்டினால், உப்புநீரால் பாதிக்கப்பட்ட பேர்ணாம்பட்டு நகரம், ஆம்பூர் நகரம் ஆகிய பகுதிகளுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்கும் என்பதால், இந்தத் தடுப்பணையைக் கட்ட அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே போதிய நீர் வரத்து இருப்பின், ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலை வடிவில் தெய்வத்தைக் கண்டேன் கோயிலிலே, மாண்புமிகு அம்மா வடிவில் வாழும் தெய்வத்தைக் கண்டேன் வேதா இல்லத்திலே. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழ்வும், வளமும் தங்களால்தான் அம்மா. நாளைய பாரதமே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக பல புதிய திட்டங்களை அறிவித்து, நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். சேலம் மாநகர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழமை வாய்ந்த குமரகிரி ஏரி தற்சமயம் சாக்கடை நீராலும், சாயக் கழிவுகளாலும் சூழப்பட்டு, அந்தப் பகுதி முழுவதும் மிகுந்த துர்நாற்றம் வீசுகிறது. சுமார் 40 ஏக்கர் பரப்பளவு உள்ள அந்த ஏரியைத் தூர் வாரி,

2013 மே 2]

நிலத்தடி நீரைப் பாதுகாத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லும், பகலும் அயராது தம் உழைப்பை அர்ப்பணித்து, கண்ணை இமை காப்பதுபோல், கழகத்தையும், தமிழகத்தையும் காத்து, தமிழக வரலாற்றில் ஒரு நாளும் அசைக்க முடியாத உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். எனது தொகுதியில், காவேரி நதிநீர் பாயும் கடைமடை கிளையாறாகிய மானங்கொண்டான் ஆற்றின் குறுக்கே கைலவனம்பேட்டை நகராட்சிப் பகுதியையும், கோவில்தாவு கிராமத்தையும் இணைக்கும் விதமாக ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால், ஆதனூர், கடினல்வயல், கருப்பம்புலம், பன்னான், ஆயக்காரன்புலம், பஞ்சநதிக்குளம், தென்னாடார், வாய்மேடு ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களின் போக்குவரத்திற்கு பெரும் பயனாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலம் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைக்கின்ற பெரும்பாலான பணிகள் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தவை

ஆகும். அதை விடுத்தால், உள்ளாட்சித் துறையைச் சார்ந்ததாக இருக்கும். வாய்க்கால்களில் பாலங்கள் அமைக்கின்ற பணிகள் மட்டுமே பொதுப் பணித் துறையைச் சார்ந்தவையாகும். எனவே, இது என்னுடைய துறைக்குச் சம்பந்தப்பட்டது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட புவனகிரி ஒன்றியம், கீரப்பாளையம் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்து, வெள்ளாற்றில் உள்ள நீர் முழுவதும் உப்பு நீராக மாறி, பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படாத அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், வெள்ளாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பதினைஞ்செட்டி, மேட்டுப்பட்டி, வாவிடைமருதூர் ஆகிய வைகை ஆற்றின் குறுக்கே உள்ள பாலங்கள் மிகப் பழமை வாய்ந்தவை. அந்தப் பாலங்கள் மிகவும் சேதமுற்ற நிலையில் இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு, அந்தப் பாலங்களைப் புதியதாகக் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2013 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் மற்றொரு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுசம்பந்தமான பதிலைக் கூறினேன். ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைக்கின்ற பணிகள் அனைத்தும் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தவையாகும் என்பதையும், இவை எங்கள் துறையின்கீழ் வராது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றின் குறுக்கே வந்தாலும் ஏற்கெனவே அந்தப் பாலங்கள் பொதுப் பணித் துறையால்தான் கட்டப்பட்டன. இப்பொழுது நாங்கள் நெடுஞ்சாலைத் துறையிடம் கேட்டால், அது எங்களுக்கு சம்பந்தமில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தப் பாலங்களை யார் கட்டுவது என்ற முடிவை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, அந்தப் பாலங்களெல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், அவற்றை செப்பனிட்டுத் தர வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை உங்களிடம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, எந்தத் துறையைச் சார்ந்தது என்பதை அறிந்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட நிலையூரில் கம்பிக்கொடி

கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில், நெடுமதுரை, கூடக்கோவில், தொட்டியப்பட்டி ஆகிய கிராமங்கள் இணைக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இந்தத் திட்டத்தினால் பயனடைகின்ற பகுதிகள் அதிகம் இருப்பின், நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 374, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

374—

கால்நடை மருத்துவமனை

***18567—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அமரடக்கி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அமரடக்கி கிராமத்திலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் கால்நடைகளின் அலகு அரசு விதிகளுக்குட்பட்டு இருக்கின்ற காரணத்தினால், அங்கே